07.07.2026
OS. No.**141/2024**
**பி.வா.சா.1 –** திருமதி.சுமதி க/பெ. ராஜா

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :-**

நான் தாக்கல் செய்திருக்கக்கூடிய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் தெரிந்து தான் கையொப்பம் செய்தேன். இந்த வழக்கின் ஏழாம் பிரதிவாதி மாலா என் உடன் பிறந்த சகோதரி ஆவார். அவர் வீராணியில் வசித்து வருகிறார். இந்த வழக்கின் எட்டாம் பிரதிவாதி பெரியநாயகி என் தாயார் ஆவார். என் தாயார் S.மேட்டூரில் வசித்து வருகிறார். அந்த ஊர் தான் எங்களது பூர்வீக ஊர் ஆகும். இந்த வழக்கில் நான் நேரடியாக எதிர் வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் முதல் பிரதிவாதி தேவராஜ் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை நான் ஏற்றுக்கொண்டு இருக்கிறேன் என்றால் சரிதான். எனது திருமணம் 1998 ஆம் வருடம் நடைபெற்றது. நான் திருமணத்திற்கு பிறகு முசிறியில் உள்ள அந்தரப்பட்டியில் வசிக்கிறேன். எனது தகப்பனாருக்கும் இந்த வழக்கின் வாதி பெரியசாமிக்கும் ஒரே நாளில் 1977 ஆம் வருடத்தில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த திருமணம் எஸ். மேட்டூரில் வைத்து நடைபெற்றது என்றால் சரிதான். வாதியின் மகள் ரேவதியை விட நான் ஒரு மாதம் மூத்தவர் ஆவேன். நானும் ரேவதியும் எஸ். மேட்டூரில் தான் பிறந்தோம். அதுவரையிலும் என் தகப்பனாரும் வாதியும் எஸ். மேட்டூர் கிராமத்தில் ஒன்றாக வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்ட பிரதிவாதிகள் ஆகிய செல்வம் சின்னப்பொண்ணு மற்றும் லட்சுமி ஆகிய மூவரும் எஸ் மேட்டூரில் வசித்து வருகிறார்கள். பிரதிவாதி இளஞ்சியம் மற்றும் மேட்டூருக்கு அருகில் உள்ள

சத்திரப்பட்டியில் வசித்து வருகிறார். இந்த வழக்கில் சி அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள சொத்துகள் யாவும் வாதியின் தகப்பனார் பெரியான் வாங்கியது என்றால் எங்கள் பாட்டி தான் வாங்கினார். அதில் என் அம்மா வழிச் சொத்தும் இருக்கிறது. என் அம்மாவிற்கு சி அட்டவணையில் கண்ட சொத்துக்கள் எவ்வாறு பாத்தியம் என்றால் என் அப்பாவின் அம்மா கொடுத்தது ஆகும். சி அட்டவணையில் கண்ட சொத்துக்கள் அனைத்தும் வாதியின் தகப்பனார் பெரியான் கிரையம் வாங்கிய சொத்துக்கள் என்றும் நான் கூறுவதுபோல் அவை என் பாட்டி சொத்து கிடையாது என்றால் சரியல்ல. சி அட்டவணையில் கண்ட 6-வது அயிட்டச் சொத்தைப் பொறுத்து கடந்த 23/7/2021 அன்று என்னுடைய தாயார் எனக்கு ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்து இருக்கிறார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் அதன் சான்றிட்ட நகல் ஆகும். அது வா.சா.ஆ.36 ஆகும். அதில் பூர்வீக சொத்து என்று குறிப்பிட்டு இருக்கிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ 13 ஆக சி அட்டவணைச் சொத்தை பெரியான் கிரையம் வாங்கிய ஆவணம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாயார் பூர்வீக சொத்தைப் பொருத்து தவறாக எழுதிக் கொடுத்த ஆவணத்தை எதிர் வழக்குரையிலும் சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றும் அது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆவணம் கிடையாது என்றால் சரியல்ல. சி அட்டவணையில் கண்ட 4-வது அயிட்டச் சொத்தைப் பொறுத்து கடந்த 26/7/2021 அன்று என்னுடைய தாயார் எனக்கு ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்து இருக்கிறார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் அதன் சான்றிட்ட நகல் ஆகும். அது வா.சா.ஆ.37 ஆகும். சி அட்டவணையில் கண்ட 5-வது அயிட்டச் சொத்தைப் பொறுத்து 23.07.2021 – ல் முதல் பிரதிவாதி எனக்கு ஒரு கிரையம் எழுதி கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். அது

ApeX

வா.சா.ஆ.38 ஆகும். சி அட்டவணையில் கண்ட 4–வது அயிட்டச் சொத்தில் ஒரு பகுதியைப் பொறுத்து சி.பெரியசாமி என்ற நபருக்கு முதல் பிரதிவாதி தேவராஜ் கிரையம் செய்து கொடுத்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. பி.வா.சா.ஆ.2–ல் வாதியின் தாயாரும், அவரது சிறிய தாயாரும் வாதியின் மைனர் மகனுக்கு வாதியின் மனைவியை காப்பாளராக காண்பித்து கிரையம் எழுதிக் கொடுத்து இருக்கிறார்கள் என்றால் அது எங்களுக்கும் பாத்தியம் உள்ள சொத்து என்று சொல்கிறோம். அது வாதியான என் தாயாருக்கும் சிறிய தாயாருக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றும் அதில் வாதிக்கும் தான் உரிமை உள்ளது என்றும் எங்களுக்கு கிடையாது என்றால் சரியல்ல. வாதியின் தாயாரும் அவரது சிறிய தாயாரும் சேர்ந்து முதல் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். அதில் எங்களுக்கும் பங்கு உள்ளது என்று கூறுகிறோம். நான் உண்மையை மறைத்து இந்த நீதிமன்றத்தில் சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி இந்த நீதிமன்றத்தில் வந்து சாட்சியம் அளித்தால் உண்மை சங்கதிகள் வெளி வந்துவிடும் என்பதால் அவர் சாட்சியம் அளிக்காமல் என்னை சாட்சியம் அளிப்பதற்கு அனுப்பி இருக்கிறார் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:–**</u> இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.),XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Approved